# பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
# ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
# Chief Secretary's Secretariat, Northern Provincial Council

187,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
187,ආඩියපාදම්පාර, තිරුනෙල්වෙලි, යාපනය.
187,Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


My No: NP/09/FRM/CIR/2015 16.01.2015

**மாகாண நிதிச்சுற்றுநிருப இல:- PF/02/2015**

மாகாணச் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களிற்கான தொலைத்தொடர்பு வசதிகள் வழங்கல் மற்றும் பற்றுச்சீட்டுகள் தீர்வு செய்தல்**

மேற்படி விடயம் தொடர்பான, நிதி திட்டமிடல் அமைச்சின் 03/2014ம் இலக்கமும் 2014.12.30ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்திற்கு அமைவாக,

1) புதிய தொலைபேசிக் கட்டண எல்லைகள் 01.01.2015ம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தும் வகையில்,

   i. உத்தியோகபூர்வ அலுவலகத் தொலைபேசிக்குரிய பற்றுச்சீட்டுக்கள் மட்டும் பின்வரும் அட்டவணையில் நிரல் (III)இன் (அ) நிரலில் குறிப்பிட்டவாறு உத்தியோகத்தர்களிற்குரிய உச்சநிலை செலவின எல்லையினுள் அலுவலகத்தால் கொடுப்பனவு செய்யபடுதல் வேண்டும்.

   ii. உத்தியோகபூர்வ வசிப்பிட, கையடக்கத் தொலைபேசி, இணையத் தொடர்பு ஆகியவற்றிற்குரிய செலவினங்கள் உத்தியோகத்தரால் தீர்வு செய்யப்படுவதற்காக நிரல் (III)இன் (ஆ) நிரலில் குறிப்பிடப்பட்டவாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு மாதாந்தக் கொடுப்பனவாக சம்பளத்துடன் வழங்கப்படுதல் வேண்டும்.

| I | II | III | |
|---|---|---|---|
| | | உச்சநிலை செலவின எல்லை (வரி மற்றும் மாதாந்தக் கட்டணம் உட்பட)ரூபா | |
| | | (அ) | (ஆ) |
| பிரிவு | உத்தியோகத்தர் தொகுதி | உத்தியோகபூர்வ அலுவலகத் தொலைபேசி | உத்தியோகபூர்வ இருப்பிடம்/ கையடக்க/ இணையத் தொடர்பு ஆகியவற்றிற்காக உத்தியோகத்தரிற்கு வழங்கப்படும் கொடுப்பனவு |
| 1 | மாகாணப் பிரதம செயலாளர் | 5,000.00 | 10,000.00 |
| 2 | மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் சம மட்ட உத்தியோகத்தர்கள் | 3,500.00 | 7,000.00 |
| 3 | மாகாணத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் சம மட்ட உத்தியோகத்தர்கள் | 2,500.00 | 5,000.00 |
| 4 | பிரதிப் பணிப்பாளர்கள், பிரதி ஆணையாளர்கள் மற்றும் சம மட்ட உத்தியோகத்தர்கள் | 2,000.00 | 4,000.00 |
| 5 | உதவிப் பணிப்பாளர்கள், உதவிச் செயலாளர்கள், உதவி ஆணையாளர்கள், மற்றும் சமநிலை உத்தியோகத்தர்கள் | 2,000.00 | 2,000.00 |
| 6 | நிர்வாக உத்தியோகத்தர்கள் | 1,000.00 | 1,000.00 |
| 7 | மாகாணப் பிரதம செயலாளர் அவர்களால் அனுமதிக்கப்படுகின்ற ஏனைய பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்கள் | 1,000.00 | Nil |


பிரதி பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 222 0843 (Dir) : 021 222 0840 (Gen) Fax : 021 222 0841 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / ක්‍රමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 (Dir) : 021 223 0451 (Gen) Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet.lk

ஆளணிப் பயிற்சி / පිරිස් හා පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதம உள்ளக கணக்காய்வாளர் / ප්‍රධාන අභ්‍යන්තර විගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

2) மேற்படி தொலைபேசி வசதிகளிற்குரித்தான அலுவலர்களிற்குரிய தொலைபேசிப்பட்டியல் தீர்ப்பனவுகள் மற்றும் மாதாந்தக் கொடுப்பனவுகள் 2015ம் ஆண்டிற்குரிய பாதீட்டில் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளினுள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்துடன் இக்கொடுப்பனவுகள் தொடர்பாக மேலதிக நிதி ஒதுக்கீடுகள் எவையும் வழங்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

3) மேலும் அலுவலகங்களிற்கான புதிய தொலைபேசி இணைப்புக்கள் பெறப்படுகின்ற போதும், ஏனைய பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களிற்குத் தொடர்பாடல் வசதிகள் வழங்கப்படுகின்றபோதும் பிரதம செயலாளரின் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

4) மேற்படி சுற்றுநிருபத்திற் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுவதுடன் இவ்விடயம் தொடர்பாக நிதி திட்டமிடல் அமைச்சால் வெளியிடப்பட்ட 2010.09.01ம் திகதிய 446ம் இலக்கச் சுற்றுநிருபம் மற்றும் 2011.11.15ம் திகதிய 1ம் இலக்கச் சுற்றுநிருபக் கடிதம் ஆகியன மேற்படி சுற்றுநிருபத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன என்பதையும் அறியத்தருகின்றேன்.

ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1) கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா – கௌரவ ஆளுநர் அவர்களிற்கு அறியத்தருவதற்காக
2) உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா } தகவலுக்காக
3) பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா } தகவலுக்காக